www.prepp.in



# தமிழ் / TAMIL

## தாள் II / Paper II

## (இலக்கியம்) / (LITERATURE)

கால அளவு : மூன்று மணி நேரம்
Time Allowed : **Three Hours**

மொத்த மதிப்பெண்கள் : **250**
Maximum Marks : **250**

## வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுத முனையுமுன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றும் அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் எட்டு வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்குவ் விடையளிக்கவும்.

வினாக்கள் 1, 5 ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றினும் குறைந்தது ஒரு வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்தொடர வேண்டும்.

வினடயளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாகக் அடிக்கப்பட வேண்டும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. 1 and 5 are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

*do follow telegram @tamiloptional_ias*

www.prepp.in

do follow telegram @tamiloptional_ias

Prepp
Your Personal Exams Guide

## SECTION A

**Q1. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10x5=50*

(a) கல்வியினால் வரும் சிறப்புகளை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் எங்ஙனம் உணர்த்துகிறான் ? *10*

(b) 'உயிர்நலச் சிறிது; காமமோ பெரிதே' - விளக்குக. *10*

(c) பெரியாரைத் துணைக்கோடலின் மேன்மையை வள்ளுவர் வழி வகுத்துரைக்க. *10*

(d) கடக்களி றடக்கிய கருணை மறவன் கோவலன் என்பதை இளங்கோவடிகள் எவ்வாறு பதிவு செய்கிறார் ? *10*

(e) 'நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிது நாள் வளர்த்துப் பின்னைப் போர்க்கோலம் செய்துவிட்டாற்கு உயிர் கொடாது அங்குப் போகேன்' எனக் கும்பகர்ணன் கூறக் காரணம் யாது ? *10*

@tamiloptional_ias

**Q2. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) மதுரை மாநகரின் மாண்பினையும் அமைப்பினையும் சிலப்பதிகாரத்தின் வழி விவரித்துரைக்க. *20*

(b) வாழ்வின் நிலையாமையைப் புறநானூற்றுப் பாடல்களின் வழி நிறுவுக. *15*

(c) 'திருப்பாவையில் இயற்கை வருணனை' - கட்டுரை வரைக. *15*

www.prepp.in

**Q3. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) அரசர்க்கு வேண்டிய நிர்வாக மேலாண்மையை வள்ளுவர் வழி நின்று தொகுத்துரைக்க. *20*

(b) கும்பகர்ணனின் நன்றி மறவாத் தகைமையைப் புலப்படுத்துக. *15*

(c) மாணிக்கவாசகர் எவற்றையெல்லாம் நீக்க வேண்டுமென இறைவனிடம் விண்ணப்பிக்கிறார் ? *15*

**Q4. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக :**

(a) "என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திவள்." *15*

(b) "நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர்
முறைவழிப் படூஉம்." *20*

(c) "பெற்றம்மேய்த் துண்ணும் குலத்திற் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது." *15*

do follow telegram @tamiloptional_ias

Prepp
Your Personal Exams Guide

## SECTION B

**Q5.** **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10x5=50*

(a) குடும்ப விளக்குத் தலைவி தங்கம் குழந்தை வளர்க்கும் திறத்தை எழுதுக. *10*

(b) 'சந்திப் பிழைகள் போன்ற சந்ததிப் பிழைகள் நாங்கள்' என்று நா. காமராசன் யாரைக் குறிப்பிடுகிறார் ? *10*

(c) அகிலனின் சித்திரப்பாவையில் ஆனந்தி பாத்திரத்தின் பண்பினைச் சித்திரிக்க. *10*

(d) எவை புரட்சி மனப்பான்மையைத் தீய்த்து விட்டன என்று அறிஞர் அண்ணா குறிப்பிடுகிறார் ? *10*

(e) அறம் வாழ்வதற்குச் செய்ய வேண்டிய மாறுதல்களாக மு.வ. குறிப்பிடுபவை யாவை ? *10*

@tamiloptional_ias

**Q6.** **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) ஜெயகாந்தனின் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள மனித வாழ்க்கையின் யதார்த்தச் சூழல்களை விவரிக்க. *20*

(b) முத்துப்பட்டனின் இயல்புகளை ஆராய்க. *15*

(c) மலை அருவி நாட்டுப்புறப் பாடல்களில் பதிவாகியுள்ள பழக்க வழக்கங்களை விளம்புக. *15*

**Q7.** **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) பெண் கல்வியின் மேன்மையினைக் குடும்ப விளக்கின் வழி மொழிக. *15*

(b) 'கண்ணன் பாட்டில் கவிநயம்' - கட்டுரை வரைக. *20*

(c) விளிம்புநிலை மக்களின் வாழ்க்கையைக் கறுப்பு மலர்கள் யங்ஙனம் பதிவு செய்கிறது ? *15*

 *do follow telegram @tamiloptional_ias*

Prepp
Your Personal Exams Guide

**Q8. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) பெண்களுக்கு எதிரான பழமைவாதங்களைச் சித்திரப் பாவை வழி கட்டுரைக்க. *15*

(b) மலையருவித் தொழிலாளர் பாடல்களின் பொருண்மையினைப் பகிர்க. *15*

(c) சமூக உறவுகளின் வலிமையை முத்துப்பட்டன் கதைப்பாடல் வெளிப்படுத்துமாற்றை ஆய்ந்துரைக்க. *20*

Prepp Your Personal Exams Guide